பல்லாவரம் – தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில் மாநில பேரிடர் வெள்ள தடுப்பு 2023-24 திட்டத்தின் கீழ் 13 இடங்களில் ரூபாய் 37.59 கோடி மதிப்பீட்டில் 12.461 கிலோமீட்டர் நீளத்திற்கு அகலமான மூடி உடன் கூடிய ஆர்.சி.சி மழை நீர் வடிகால் கால்வாய் அமைக்கும் பணிகளை கழகப் பொருளாளரும் திமுக நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும் காஞ்சிபுரம் மாவட்ட கழகச் செயலாளருமான தா.மோ.அன்பரசன் ஆகியோர் துவக்கி வைத்தார்கள் அப்பொழுது மாவட்ட ஆட்சியர் ஏ.ஆர்.ராகுல் நாத் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா , தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அழகு மீனா, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டலத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர் செயலாளர் ஏ. கே. கருணாகரன், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், வட்டக் கழகச் செயலாளர் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

புதுடெல்லியில் நேற்று (13.06.2023) பேரிடர் மேலாண்மை குறித்து மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்கள் ஆய்வு கூட்டம் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மேட்டூர் அணை திறப்பு

# முதலமைச்சருக்குப் பாராட்டு! விவசாயிகள் மகிழ்ச்சி!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

**சென்னை, ஜூன், 14 – குறிப்பிட்ட தேதியில் 3வது முறையாக மேட்டூர் அணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்ததற்கு, விவ சாயிகள் மகிழ்ச்சி தெரி வித்து தங்களது பாராட்டு களையும் தெரிவித்து வருவதை ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.**

தினகரன்
ஜூன் 13, 2023 செவ்வாய்க்கிழமை

விவசாயிகள் மகிழ்ச்சி

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா மாவட்டங்களின் குறுவை சாகுபடிக்கான தண்ணீரை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு, விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து வருகிறார். இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. தூர்வாரும் பணிகள் குறிப்பிட்ட நேரத்தில் முடிந்துள்ளதால், மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்டுள்ள தண்ணீர் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள பாசன

‘தினகரன்’ தலையங்கம் வருமாறு:

அணையில் இருந்து காவிரி டெல்டா மாவட்டங்களின் குறுவை சாகுபடிக்கான தண்ணீரை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு, விவசாயி களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து வருகிறார். இதனால் விவசாயி களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. தூர்வாரும் பணிகள் குறிப்பிட்ட நேரத்தில் முடிந்துள்ளதால், மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்டுள்ள தண்ணீர் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள பாசன வாய்க்கால்களில் உரிய நேரத்தில் கடைமடை வரை தங்கு தடையின்றி சென்றடையும். மேலும், வெள்ளக்காலங்களில் மிக விரைவில் தண்ணீர் வடியவும் ஏதுவாக இருக்கும்.

கடந்த ஆட்சியில் விவசாயம் செய்வதே பெரும் சவாலாக இருந்தது. இதனால் விவசாயிகள் விவசாயத்தை விட்டு விட்டு வேறு தொழிலுக்கு சென்றனர். தற்போது, விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சேலம், நாமக்கல், திருச்சி, புதுக் கோட்டை, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் உள்ளிட்ட பகுதிகளில் ரூ.90 கோடி மதிப்பீட்டில் 4773.13 கிலோ மீட்டர் தூரத்திற்கு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயிகள் பயன் பெறும் வகையிலும், பருவ காலத்துக்கேற்ப பயிர் சாகுபடி செய்ய உதவும் வகையிலும் மேட்டூர் அணையை திறந்து வைத்துள்ள முதல்வருக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு விவசாய தொழிலை அதிகப்படுத்தி விவசாயிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. இது விவசாயிகள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது. பாசன பரப்பு அதிகரிப்பதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் என்பது குறிப்பிடத்தக்கது. முக்கியமாக, வேளாண்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. நாடு வல்லரசு அடைய வேண்டும் என்றால், விவசாயிகளின் பங்களிப்பு மிக அவசியம். எனவே விவசாயி களை புறக்கணிக்க கூடாது.

விவசாயிகள் நலன் தான் முக்கியம் என்று சொல்லி விட்டு, விவசாயிகளுக்கு எதிரான விஷயங்களில் ஈடுபடுவதை ஒன்றிய அரசு வாடிக்கையாக வைத்துள்ளது. இதற்கு சிறந்த உதாரணம், வேளாண் சட்டங்களை எதிர்த்து டெல்லியில் பல மாதங்களாக போராடிய விவசாயிகளை ஒன்றிய அரசு எப்படி கையாண்டது என்பதே. நாட்டில் மக்கள் தொகை எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. ஆனால், உணவு உற்பத்தி எதிர்பார்த்த அளவு இல்லை. இது பல்வேறு சிக்கல்களுக்கு வழிவகுத்து விடும். எனவே விவசாயத்தை ஊக்குவிக்கும் முயற்சியில் ஒன்றிய அரசு இறங்க வேண்டும். விவசாயிகளை புறக்கணித்தால், பல்வேறு பாதிப்புகளை மக்கள் எதிர்காலத்தில் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை ஒன்றிய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

விவசாயிகளை நேரிடையாக சந்தித்து, அவர்களின் குரலுக்கு செவிசாய்க்கும் முயற்சியில் ஒன்றிய அரசு இறங்க வேண்டும். நாட்டில் விவசாயம் அதீத வளர்ச்சி காண வேண்டும். அதற்கு ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு கண்டிப்பாக தேவை. வேளாண் துறையில் தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நடவடிக்கையை பார்த்து, ஒன்றிய அரசு பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக, விவசாயிகள் கோரிக்கை வைக்காமலே அவர்களுக்கு பல்வேறு புதிய திட்டங்களை தமிழ்நாடு அரசு அறிவித்து வருகிறது. மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்டுள்ள தண்ணீரை, விவசாயிகள் கடந்த ஆண்டுகளை போல் சிக்கனமாக பயன்படுத்தி நெல் உற்பத்தியில் சாதனை படைக்க வேண்டும்.

இவ்வாறு ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

### யோகா – இயற்கை மருத்துவ சுயநிதிக் கல்லூரி

# மாணவர் சேர்க்கைக் கலந்தாலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, ஜூன்.14-*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (13.06.2023) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், யோகா மற்றும் இயற்கை மருத்துவ சுய நிதி கல்லூரி மாணவர் சேர்க்கை பகிர்ந்தளிப்பு தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.*

*பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:*

*இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையரகத்தின் கீழ் சுய நிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரிகளுடன் இடங்கள் பகிர்ந்தளிப்பு தொடர்பான கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டை பொறுத்தவரை 17 கல்லூரிகள் யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளாக இயங்கி கொண்டிருக்கிறது. 17 சுய நிதி கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடாக 993 பேரும், 2 அரசு கல்லூரிகளில் 160 பேரும் என்று மொத்தமாக 1153 மாணவர் சேர்க்கை நடைபெற்று வந்தது. மேலும், 17 சுய நிதி கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் 557 இடங்கள் தமிழ்நாடு அரசின் தேர்வுக் குழுவினரால் நிரப்பப்பட்டு வருகிறது. ஆக மொத்தம் 1710 இடங்கள் ஒவ்வொரு ஆண்டும் சுயநிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளில் நிரப்பப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் தொடங்க வேண்டிய வகுப்புகள், மாணவர் சேர்க்கை தள்ளிப்போவதால் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை தள்ளிப் போவதாக குற்றச்சாட்டு இந்த சுயநிதி கல்லூரிகளின் நிர்வாகிகளால் தெரிவிக்கப்பட்டது. நீட் தேர்வு மற்றும் அதன் கலந்தாய்வினால் இந்த காலதாமதம் ஏற்பட்டு வந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதற்கு துறையின் செயலாளர் அவர்கள் நீட் தேர்வுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், 12ம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் கல்லூரிகளில் சேர்க்கை நடைபெற்று வருவதால் நீட் தேர்வு முடிவுகள் வரும் வரையில் இதற்காக காத்திருக்க வேண்டாம், 12ம் வகுப்பு முடிவுகள் வந்தவுடனே கலந்தாய்வு நடத்த அனுமதிக்கலாம் என்று இந்த கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவினால் 17 சுயநிதி கல்லூரிகளின் நிர்வாகிகளும் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். யோகா மற்றும் இயற்கை மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் வருங்காலத்தில் நடத்தப்படவுள்ளது, இந்த நடவடிக்கைகளினால் இந்த படிப்புகளுக்கான 1710 இடங்களும் முழுமையாக நிரம்ப வாய்ப்புள்ளது.*

**மருத்துவப் பணியிடங்கள்**

*தமிழ்நாட்டில் மருத்துவர்கள் பணிச்சுமையினால் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கருத்து மிகவும் தவறானதாகும். மருத்துவ துறையில் காலியாக உள்ள 1021 பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை மேற்கொண்டபோது, மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அதுவும் முடிவிற்கு வந்து தமிழ் தேர்வு சம்பந்தமாக 1021 இடங்களுக்கு சுமார் 25,000 மாணவர்கள் தேர்வு எழுதியிருக்கிறார்கள். மேலும் தமிழ் தேர்வு எழுதியவர்களுக்கு தேர்வு முடிவு வெளிடப்பட்டுவிட்டது. தற்போது மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்திற்கு புதிய செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் இறுதி தேர்வு முடிவுகள் இன்னும் ஒரு சில நாட்களில் வெளியிடப்படவிருக்கிறது. தேர்வு முடிவு வெளியிடப்பட்டவுடன் 1021 மருத்துவர்களும், 980 மருந்தாளுநர்களும் தேர்வு செய்யப்படவுள்ளனர். இதில் 980 மருந்தாளுநர்கள் பணிக்கு மட்டும் 43,000 பேர் விண்ணப்பித்து இருந்தார்கள். எனவே காலியாக உள்ள மருத்துவ பணியிடங்கள் விரைவில் நிரப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை பணியிடங்கள்**

*தற்போது மாவட்ட நல வாழ்வு சங்கத்தினால் (District Health Society) 500 புதிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில் தற்போது இணைப் பேராசிரியர்கள் 30 பேர், உதவிப் பேராசிரியர்கள் 100 பேர் என்று ஆகமொத்தம் 130 பணியிடங்களுக்கு கலந்தாய்வு நடத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் அம்மருத்துவமனைக்கு தனியாக ஒரு இயக்குநர், இரண்டு உதவி நிலைய மருத்துவர் நியமிக்கப்பட விருக்கிறார்கள். இதையும் கடந்து மருத்துவமனை நிர்வாகத்தை மிகச் சிறப்பாக செய்வதற்கு புதியதாக 757 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த 757 பணியிடங்களுக்கான அரசாணை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. எனவே மருத்துவ பணியிடங்கள் நிரப்புவதற்கு முக்கியத்துவம் இந்த அரசு வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.*

*மேலும் மாவட்ட நல வாழ்வு சங்கத்தின் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்கள், 21 மாநகராட்சிகள், 63 நகராட்சிகள் போன்ற பகுதிகளில் புதிய மருத்துவமனைகள் எங்கெல்லாம் திறக்கப்பட்டதோ அங்கெல்லாம் மருத்துவ பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. மேலும் புதிய மருத்துவ கட்டமைப்பு உருவாக்கப்படும்போது அதற்கேற்ப பணியிடங்களை அரசு உருவாக்கிக் கொண்டு தான் இருக்கிறது. எனவே ஏற்கெனவே இருக்கின்ற பணியிடங்களில் தான் புதிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள் என்பது தவறான விவாதமாகும்.*

**புதிய மருத்துவ கல்லூரிகளின் மருத்துவ சேவை**

*11 புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளைப் பொறுத்தவரை இதுவரை 7 புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மருத்துவச் சேவைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மருத்துவமனையிலும் 500 முதல் 700 படுக்கைகள் வரை புதியதாக திறக்கப்பட்டு வருகிறது. தேவையான உபகரணங்கள் வாங்கும் பணி, நோயாளிகளின் தேவைக்கேற்ப முடிவுசெய்யப்பட்டு வாங்கப்பட்டு வருகிறது, இவை அனைத்தும் முழுமையாக பயன்பாட்டிற்கு வருவதற்கு 3 மாதங்கள் வரை ஆகும்.*

*ஓமந்தூரார், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையை இடம் மாற்றும் எண்ணம் இல்லை*

*ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை தொடர்ந்து இதே இடத்தில் செயல்படும், இதை இடமாற்றம் செய்யும் எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை. இங்கு உள்நோயாளிகளாக 450 பேரும், புறநோயாளிகளாக 1500 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுபோன்று கூடுதல் எண்ணிக்கையுடன் அரசு மருத்துவ சேவைகளை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளும்போது கூடுதல் வசதிகள் படிப்படியாக மருத்துவமனைகளுக்கு ஏற்படுத்தப்படும்.*

*இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் ஹோமியோபதி துறை ஆணையர் திருமதி.மைதிலி. கே.ராஜேந்திரன், இணை இயக்குநர்கள் மரு.மணவாளன், மரு. பார்த்திபன் மற்றும் தனியார் கல்லூரி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.*

திருவள்ளூரில் வீரராகவ சுவாமி திருக்கோயில் கூட்டரங்கத்தில் இந்து சமய அறநிலையத்துறை சார்பாக வகைப்படுத்தப்பட்ட சமய அறநிறுவனங்களைத் தவிர மற்ற சமய அறநிறுவனங்களுக்கு பரம்பரை முறைவழி சாரா அறங்காவலர்களை நியமனம் செய்திட, தகுதி வாய்ந்த நபர்களை தெரிவு செய்து பரிந்துரைப்பதற்கு ஏதுவாக அமைக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்ட அளவிலான குழுவினர் பதவி ஏற்பு விழாவை மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் பதவி ஏற்று கொண்டார்கள். உடன் இணை ஆணையர் (வேலூர்) க.ரமணி, உதவி ஆணையர் கே.சித்ராதேவி. தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, அறங்காவலர்குழு தலைவர்எம்.சி.வெங்கடேஸ்வரபாபு,நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் டி.லட்சுமி நாராயணன், துரைக்கண்ணன், க.வெங்கடேஷ், கோ.கார்த்திகேயம், ஆர்.மேனகா, ஒன்றிய நகர செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், ஆர்த்தி ரவி, வி.வினோத்குமார், சி.ஜெ.சீனிவாசன், என்.கிருஷ்ணன், பெ.பழனி, மாவட்ட கவுன்சிலர் சரஸ்வதி,நகர் மன்ற துணை தலைவர் சாமிராஜ், நிர்வாகிகள் டி.கே.பாபு, சி.சு.விஜயகுமார், தி.ஆ.கமலக்கண்ணன், ஷாம்சுந்தர் கே.ஜி.ஆர்.ராஜேஷ் குமார், அ.பவளவண்ணன், ம.கிரண், உள்பட பலர் பங்கேற்றனர்.